DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special Sessions Case No. 04-2024**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாதவன் | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 03.04.2025

**முதல் விசாரணை**

நான் ஒரத்துார் தெற்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவருடைய பெயர் வீரமணி. அவர் எந்த சமூதாயத்தை சேர்ந்தவர் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் எந்த சமூகத்தை சேர்ந்தவர் என்ற விபரமும் அவருக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுக்கவில்லை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 04.10.2023ந் தேதி ஆஜர் எதிரியிடம் உங்களுடைய பிளண்டர் பிளஸ் TN 51AH 7661 என்ற வாகனம் மற்றும் RC புக்கையும் ஆஜர் எதிரியிடம் ரூபாய் 5,000 திற்கு அடகு வைத்ததாகவும், பின்னிட்டு

அந்த 5000 ரூபாய் பணத்தை உங்களுடைய மாமா விக்னேஷ் என்பவரும் ஆஜர் எதிரியிடம் பணத்தை கொடுத்து வண்டியை திருப்பி வாங்கிகொண்டதாகவும், பின்னர் நீங்க உங்களுடைய போனில் ஆஜர் எதிரி போனுக்கு தொடர்பு கொண்டு RC Book ஐ கேட்டதாகவும், அதற்கு ஆஜர் எதிரி உங்களை சாதியை சொல்லி திட்டி கொலை மிரட்டல் செய்ததாகவும், இந்த சம்பவத்தை ஒட்டி வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் நீங்கள் புகார் மனு அளிதது பின்னிட்டு புகார் மனு சம்பந்தமாக நாகப்பட்டினம் DSP உங்களை வந்து விசாரித்தபோது உங்களுக்கு ஏற்பட்ட சம்பவத்தை விசாரணை அதிகாரியிடம் கூறிவிட்டு தற்போது நான் புகார் மனு கொடுக்கவில்லை என்றும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது என்றும், ஆஜர் எதிரியை காபாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் நீதிமன்றம் முன்பு ஆஜராகி பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கிறார்